**செய்தி வெளியீடு எண்: 587** **நாள்:14.08.2020**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் இன்று (14.8.2020) தலைமைச் செயலகத்தில், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை சார்பில், புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 24 கோடியே 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சிறுநீரக சிறப்பு சிகிச்சை மையத்தை, கொரோனா தொற்றுக்கு சிகிச்சை அளிக்க பயன்படுத்திக் கொள்ளும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள கொரோனா சிறப்பு சிகிச்சை ஒப்புயர்வு மையத்தை காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், 4 கோடியே 68 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மருத்துவமனை கட்டடங்களை திறந்து வைத்து, கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரியில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக 80 கோடியே 98 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள கல்வியியல் கட்டடம், நிர்வாகக் கட்டடம், நூலகம், ஆண்கள் மற்றும் பெண்கள் விடுதிகள் ஆகிய கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

ஏழை எளிய மக்களுக்கு உயர்தர மருத்துவ வசதிகள் தங்கு தடையின்றி கிடைக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகள், வட்ட மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துதல், நவீன மருத்துவக் கருவிகள் நிறுவுதல், புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களை தோற்றுவித்தல், எளிதில் செல்ல முடியாத பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு, அவர்கள் வாழும் பகுதிகளிலேயே தரம் வாய்ந்த மருத்துவ வசதி கிடைக்க வழிவகை செய்தல், மருத்துவத் துறையில் தொழில்நுட்ப வளர்ச்சியினை பயன்படுத்தி உயர்தர மருத்துவ வசதிகள் அளித்தல் போன்ற பல முன்னோடி திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 24 கோடியே 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள

சிறுநீரக சிறப்பு சிகிச்சை மையத்தை, கொரோனா தொற்றுக்கு சிகிச்சை அளிக்க பயன்படுத்திக் கொள்ளும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள கொரோனா சிறப்பு சிகிச்சை ஒப்புயர்வு மையத்தை காணொலிக் காட்சி மூலமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள். இந்த ஒப்புயர்வு மையத்தில், 350 படுக்கைகளில், 35 படுக்கைகள் அதிதீவிர சிகிச்சைகளுக்காகவும், 165 படுக்கைகள் ஆக்ஸிஜன் வசதிகளுடனும், 15 தனி அறை வசதிகளும், 3 அதிநவீன சிகிச்சை அரங்குகளும் அமைக்கப்பட்டுள்ளன. அதிநவீன சிகிச்சை அரங்குகளில் பலதரப்பட்ட செயற்கை சுவாச கருவிகளான Invasive Ventilator, Bipap. C pap மற்றும் HFNC உடன் Multipara Monitor, Defibrillator போன்ற கருவிகளும் உள்ளன. திரவநிலை ஆக்ஸிஜனை சேமிக்கக் கூடிய 6 KL திறன் கொண்ட கொள்கலன் அமைக்கப்பட்டுள்ளது. அரசு புதுக்கோட்டை கொரோனா சிறப்பு மருத்துவமனையில் காய்ச்சல் வெளிநோயாளிகள் பிரிவு, பரிசோதனைக் கூடம், எக்ஸ்–ரே ஆகிய வசதிகள் பிரத்யேகமாக அமைக்கப்பட்டுள்ளது. இதனுடன் மக்களின் நலனுக்காக ஒரு யோகா கூடமும் அமைக்கப்பட்டுள்ளது. அரசு ராணீஸ் மருத்துவமனையானது, Screening Centre ஆகவும், கொரோனா கேர் சென்டர் ஆகவும் செயல்படும். அங்கு வரும் நோயாளிகளில் கொரோனா அறிகுறி உள்ளவர்கள் மற்றும் அதனுடன் இணைநோய் உள்ளவர்கள் ஆம்புலன்ஸ் மூலம் அரசு புதுக்கோட்டை கொரோனா சிறப்பு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள். அங்கு 24 x 7 மணி நேரமும் நோயாளிகள் அனுமதிக்கப்பட்டு நோயின் தன்மைக்கு ஏற்ப தகுந்த சிகிச்சை அளிக்கப்படும்.

மேலும், அரியலூர் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில், 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாவட்ட தொடக்க நிலை இடையீட்டு சேவைகள் மையக் கட்டடம்; பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை சார்பில் கடலூர் மாவட்டம் – தொளார், கள்ளக்குறிச்சி மாவட்டம் – குடியநல்லூர், தென்காசி மாவட்டம் – மாறாந்தை மற்றும் திருவள்ளூர் மாவட்டம் – விளாங்காடுபாக்கம் ஆகிய 4 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு 2 கோடியே 48 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்

கட்டப்பட்டுள்ள கட்டடங்கள்; விருதுநகர் மாவட்டம் – சத்திரப்பட்டி மற்றும் ராணிப்பேட்டை மாவட்டம் – வெங்குப்பட்டு ஆகிய இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களில் தலா 60 லட்சம் ரூபாய் வீதம், மொத்தம் 1 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புறநோயாளிகள் பிரிவுக் கட்டடங்கள்;

என மொத்தம் 29 கோடியே 8 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மருத்துவமனை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரியில் மருத்துவப் பட்டப் படிப்புகளுக்கான இடங்கள் 150–லிருந்து 250–ஆக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்திய மருத்துவக் குழும விதிகளின்படி, கூடுதல் மருத்துவப் பட்டப்படிப்பு இடங்களுக்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டியது அவசியம் ஆகும். அதன்படி, கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரியில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக, 80 கோடியே 98 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள கல்வியியல் கட்டடம், நிர்வாகக் கட்டடம், நூலகக் கட்டடம், ஆண்கள் விடுதி கட்டடம் மற்றும் பெண்கள் விடுதி கட்டடம் ஆகிய கட்டடங்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று அடிக்கல் நாட்டினார்கள்.

மேலும், மருத்துவத் துறையில் காலியாக உள்ள 363 இளநிலை உதவியாளர் பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று 5 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள்.

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டு வீட்டில் தனிமைப்படுத்திக் கொள்ள அறிவுறுத்தப்பட்டவர்கள் மற்றும் கொரோனா தொற்று அறிகுறி உள்ளவர்கள் பயன்பெறும் வகையில், தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு

மருத்துவமனையின் அம்மா முழு உடல் பரிசோதனை மையம் மூலமாக "அம்மா Covid-19 வீட்டுப் பராமரிப்பு" சேவை திட்டத்தின் கீழ், சலுகை விலையான 2,500 ரூபாயில், 14 நாட்களுக்கான தொகுப்பாக, ஒரு Pulse Oximeter கருவி, ஒரு Digital Thermometer கருவி, 14 முகக்கவசங்கள், ஒரு கைகழுவும் சோப்பு, அதிமதுரம் மற்றும் கபசுரக் குடிநீர் பவுடர் பாக்கெட்டுகள், 60 அமுக்ரா சூரணம் மாத்திரைகள், 14 வைட்டமின்–சி மாத்திரைகள், 14 Zinc மாத்திரைகள், 14 மல்டி வைட்டமின் மாத்திரைகள், கோவிட் கையேடு ஆகியவை அடங்கிய பெட்டகங்களை வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையின் ஒருங்கிணைப்பு அலுவலருக்கு பெட்டகத்தை வழங்கி துவக்கி வைத்தார்கள். இதன்மூலம், கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டு இருந்தாலும், மருத்துவர்களின் தொடர் கண்காணிப்பில் வருவதோடு, தீவிர நோய் அறிகுறிகள் கண்டறியப்பட்டு, உடனடியாக மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெறுவதற்கும் ஏதுவாக அமையும்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், தலைமைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., மாநில நலவாழ்வு குழும இயக்குநர் டாக்டர் கே. செந்தில் ராஜ், இ.ஆ.ப., மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர் ஆர். நாராயணபாபு, மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் டாக்டர் குருநாதன், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்குநர் (சிறப்பு அலுவல் பணி) டாக்டர் பி. வடிவேலன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**